

# உண்மையான வெற்றி

மேகலா இரஞ்சித்

STEM-Kalvi Charity

3.2



ஒரு ஊரில் ஒரு சிறுவன் அவனின் பெற்றோருடன் வாழ்ந்து வந்தான்.




அவனுக்கு மண்ணில் விளையாட மிகவும் பிடிக்கும்.

மண்ணை ஆழமாகத் தோண்டி அதனுள் கிடைக்கும் கற்களை ஆர்வமாக சேர்ப்பான்.



சிவப்பு நிறக் கற்களைக் கண்டால் இது எரிமலைக் கற்கள் என்பான்.

மஞ்சள் நிறக் கற்களைக் கண்டால் தங்கக் கற்கள் என்று வகைப்படுத்தி விளையாடுவான்



அவனது ஆர்வத்தை கண்ட அன்னை

அவனை மேலும் மகிழ்ச்சியாக்க விரும்பினார்.

தங்கநிறம் பூசப்பட்ட  கற்கள் சிலவற்றை

வாங்கி குழிக்குள்  புதைத்து வைத்தார்.



மறுநாள் மண்ணில் விளையாடும் பொழுது, மின்னும் பொன் கற்களைக்  கண்டான்.

அவனது கண்களை அவனால் நம்ப முடியவில்லை.

அளவற்ற ஆனந்தத்தில் துள்ளிக்  குதித்தான்.



"அம்மா இதோ நான் மண்ணுக்குள் எடுத்த தங்கம் "! என்று காட்டினான்.

அவனது அளவிலாத ஆனந்தத்தை கண்ட அன்னை மனம் பூரித்தார்.

தான் மிகவும் நல்ல விடயம் செய்ததாக பெருமை அடைந்தார்.




இது முக்கோணம்



இது வட்டம்



இது சதுரம்




இது செவ்வகம் (நீள்சதுரம்)

கற்களின் வித விதமான வடிவங்களை வகைப் படுத்தி விளையாடுவான்.




*எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று கணக்கிடுவான்.*

*1-ஒன்று, 2-இரண்டு, 3-மூன்று, 4-நான்கு, 5-ஐந்து, 6-ஆறு, 7-ஏழு, 8-எட்டு, 9-ஒன்பது, 10-பத்து.*



சில நாட்கள் சென்றன.

ஒருநாள், அம்மா ஒளித்து வைத்த மிகுதி தங்கக் கற்களைக் கண்டான்.

அம்மாவின் வேலைதான் இது என்பதை சிறுவன்  விளங்கிக் கொண்டான்.



“அம்மா இது உங்கள் வேலைதான், நான் கண்டு பிடித்து விட்டேன் ! ” .

என்று சிரிப்போடு ஓடி வந்து சொன்னவன் சில கணங்களில் அழு ஆரம்பிதான்.

“தங்கக் கற்களை நான் உண்மையிலேயே கண்டு பிடிக்கவில்லையா” என்று மேலும் அழுதான்.



அன்னையின் நிலைமை மிகவும் கடினமாயிற்று.

தான் செய்தது தவறு என்று மனம் வருந்தினார்.

மகனை அணைத்து ஆறுதல் கூறினார்.



ஒருவருக்கு தனது சொந்த முயற்சியால் அடையும் வெற்றியே மகிழ்ச்சி தரும்.

இதை அன்னை தாமதமாக உணர்ந்து கொண்டார்.



மகனுக்கு புதிய மண்வெட்டியும் உலோகம் கண்டுபிடிக்கும் கருவியும் வாங்கிக் கொடுத்தார்.

அவனுடைய கற்கள், பொருட்கள் தேடும் விளையாட்டுக்கு மேலும் ஊக்கமளித்தார்.



சிறுவன் மீண்டும் மிக ஆர்வத்துடன் கற்களை கண்டெடுக்க தொடங்கினான்.

அவனுக்கு இம்முறை ஒரு எரிமலைக் கல்லு உண்மையாகவே கிடைத்தது.

சிறுவன் துள்ளிக் குதித்து மகிழ்ந்தான்.

முற்றும்

**Publisher:** STEM-Kalvi Charity

**Email**: STEMkalvi@gmail.com

**Web:** WWW.STEMkalvi.org

**Writer :** Mehala Ranjith,
Wellington, New Zealand



**Book: Unmaiyaana Vetri**
**(உண்மையான வெற்றி)**

**Language: Tamil**

**Reading Level**: 3.2

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and
Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022

**About the writer:** Mehala, a Sri Lankan science graduate with an applied computing diploma, now calls Wellington, NZ home. Her diverse life experiences in both Sri Lanka and New Zealand serve as a wellspring of inspiration for enchanting tales that young imaginations will treasure.

| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics